# முகவுரை

உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த வாய்மொழி சிறப்புத் தேர்ச்சிக்கான உத்திகள் என்னும் புத்தகம், மாணவர்களுக்கு எளிய முறையில் வாய்மொழி தேர்வினைச் சிறப்பாக மேற்கொள்வதற்கு உதவ வேண்டும் எனும் நோக்கத்தில் சிகரத்தால் வெளியிடப்பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளிகளுக்கான (MOE) தமிழ்மொழிப் பாடத்திட்டத்தைத் தழுவி இந்தப் புத்தகம் அமைந்துள்ளது.

இந்தப் புத்தகத்தில் வாய்மொழித் தேர்வுக்கான **15** முக்கியத் தலைப்புகள் தொடர்பான சொல்வளங்கள் இடம்பெற்றுள்ளது. சிறப்பான முறையில் பதிலளிக்க தேவையான வழிகாட்டல்கள் எளிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. தலைப்புகள் ஒட்டிய கூடுதல் தகவல்களும் இதில் இணைக்கப்பட்டுள்ளன. அனைத்து நிலை மாணவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் சில சொல்வளங்கள் ஆங்கில மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

வாய்மொழி சிறப்புத் தேர்ச்சிக்கான உத்திகள் என்ற புத்தகத்தின் வாயிலாகத், தேர்வை எதிர்நோக்கும் உயர்நிலை மாணவர்கள் முக்கியத் தலைப்புகளைக் கொண்டு உத்திகளின் வழி மாதிரி வினாக்களுக்கு உகந்த பதிலளிக்கும் திறனை மேம்படுத்திக் கொள்ளலாம். இப்புத்தகத்தைப் பயன்படுத்தி சிறந்த மதிப்பெண்களைப் பெறுவதற்கு வேர்ட்ஸ்மித் சிகரம் வாழ்த்துகிறது!

நன்றி

பதிப்பாளர் குழு

வேர்ட்ஸ்மித் சிகரம் கல்வி நிறுவனம்

# HOW TO GET FULL SCORE IN TAMIL ORAL - SEC 1

# வாய்மொழி சிறப்புத் தேர்ச்சிக்கான உத்திகள் - உயர்நிலை 1

## பொருளடக்கம்


| எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| 1 | பொது உடைமைகளைப் பாதுகாத்தல் (Protecting Public Belongings) | 1 - 6 |
| 2 | சமூகச் சேவைகளில் ஈடுபடுதல் (Engage In Social Service) | 7 - 12 |
| 3 | நட்பைப் பேணுதல் (Friendship) | 13 - 18 |
| 4 | கேலிவதை (Bullying) | 19 - 24 |
| 5 | சாலை பாதுகாப்பு (Road Safety) | 25 - 30 |
| 6 | இந்தியர் மரபுடைமை நிலையம் (Indian Heritage Centre) | 31 - 36 |
| 7 | உடல் ஆரோக்கியம் (Healthy Lifestyle) | 37 - 42 |
| 8 | நூலகத்தின் பயன்பாடு (Benefits Of Library) | 43 - 48 |
| 9 | கொவிட்-19 (Covid-19) | 49 - 54 |
| 10 | பூமி வெப்பமயமாதல் (Global Warming) | 55 - 60 |
| 11 | முன் மாதிரி மாணவன் (Role Model Student) | 61 - 66 |
| 12 | உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் மாணவர் உறவு<br>(Teacher - Student Relationship In High School) | 67 - 72 |
| 13 | குழுவாகப் படித்தல் (Group Study) | 73 - 78 |
| 14 | பதின்ம வயதினரும் முறைகேடான செயல்களும்<br>(Teenagers And Their UnEthical Actions) | 79 - 84 |
| 15 | சிங்கப்பூர் கண்கவர் இடங்கள் (Fascinating Places In Singapore) | 85 - 90 |

# 1. பொது உடைமைகளைப் பாதுகாத்தல் (Protecting Public Belongings)

**சொல்வளம்**

| | | |
|---|---|---|
| 1. | நாசவேலை | Vandalism |
| 2. | குடிமக்கள் கடமை | Citizen's Responsibility |
| 3. | நாட்டின் நலன் | Nation's Welfare |
| 4. | அழிவு | Destruction |
| 5. | வன்முறை | Violence |
| 6. | பாழாக்குதல் | Damaged |
| 7. | நஷ்டம் | Loss |
| 8. | சொத்து | Asset |
| 9. | சுவர் மீது கிறுக்கப்பட்ட வாசகங்கள் | Graffiti |
| 10. | மீறுதல் | Violate |
| 11. | அமைதியைக் கெடுப்பது | Disturbing The Peace |
| 12. | தரவுகளைக் களவாடுதல் | Stealing Data |
| 13. | நாட்டுப்பற்று | Patriotism |
| 14. | பிளவு | Split |
| 15. | விஷமம் | Mischief |





**கேள்விகள்**

**1. பொது உடைமைகள் என்றால் என்ன? அதை எவ்வாறு பாதுகாக்கலாம்?**

- நாட்டு மக்கள் அனைவரும் பயன்படுத்தும் பொருட்டு அரசாங்கம் வழங்கப்படும் பொருள்கள், கட்டடங்கள், வாகனங்கள், நீர் குழாய்கள், நூல் நிலையங்கள் போன்றவை பொது சொத்துகள்.
- கவனமாகப் பயன்படுத்த வேண்டும்.
- பொது உடைமைகளைப் பொதுமக்கள் அனைவரும் இலவசமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
- எனவே, அவற்றை முறையாகப் பயன்படுத்த வேண்டும்.
- பொது உடைமைகளை நம் பொருள்களைப் போல பேணிக்காக்க வேண்டும்.
- பொது உடைமைகளைத் திருடக்கூடாது.
- அதனைச் சேதப்படுத்தக் கூடாது - கிறுக்குதல், கிழித்தல், உடைத்தல்.
- அதனைச் சீரழிப்பவர்களைக் கண்டால் அருகில் உள்ள காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம்.

- ____________________________________________

  ____________________________________________

- ____________________________________________

  ____________________________________________

- ____________________________________________

  ____________________________________________

2. **உன் நண்பன் பள்ளி உடைமைகளைச் சேதம் (Damage) செய்வதைப் பார்த்தால் நீ என்ன செய்வாய்?**

- நான் அவன் மேல் அதிக கோபம் கொள்வேன்.
- விரைந்து சென்று அவனைக் கண்டிப்பேன்.
- அம்மாணவனிடம் அப்படி செய்யக் கூடாது என்று அறிவுரைக் கூறுவேன்.
- அவனுக்குப் பள்ளியின் சட்டத்திட்டங்களையும் அதன் விளைவுகளையும் எடுத்துரைப்பேன்.
- அப்படியும் அறிவுரையைக் கேட்கவில்லை என்றால் அம்மாணவனின் செயல் தொடர்பாகப் புகார் கொடுப்பேன்.
- பள்ளி ஆலோசகரிடம் கூறுவேன்.
- அந்த மாணவனின் முரட்டுத்தனமான (Violence) நடவடிக்கையைக் கட்டொழுங்கு ஆசிரியரிடம் கூறி அவனுடன் பேச்சு வார்த்தை நடத்த கூறுவேன்.
- அவனின் பெற்றோரிடம் அவனின் செயல் குறித்து கூறுவேன்.

- ____________________________________________________________

  ____________________________________________________________

- ____________________________________________________________

  ____________________________________________________________

- ____________________________________________________________

  ____________________________________________________________

**3. மாணவர்கள் இம்மாதிரியான தவறுகளைச் செய்வதில் இருந்து ஆசிரியர்கள் எவ்வாறு தடுக்கலாம்?**

- மாணவர்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கலாம் (Monitor).
- பொது உடைமைகளைப் பாதுகாப்பதின் முக்கியத்துவத்தைப் பற்றி பட்டறை (Workshop) அல்லது கருத்துப் பயிலரங்கு மூலம் மாணவர்களுக்கு எடுத்துரைக்கலாம்.
- ஆசிரியர் மாணவர்களுக்குப் பொது உடைமைகளை நாசம் செய்வதன் விளைவுகளைக் காணொளியில் காண்பிக்கலாம்.
- ஆசிரியர்கள் பொது உடைமைகளைப் பாதுகாப்பதில் மாணவர்களுக்கு முன்னுதாரணமாக விளங்கலாம்.
- பிரச்சனைக்குரிய மாணவர்களின் பெற்றோர்களைப் பள்ளிக்கு அழைத்து வந்து மாணவனை எப்படி திருத்தலாம் என்று கலந்து ஆலோசிக்கலாம்.
- பொது உடைமைகளைச் சேதப்படுத்துபவர்களைப் புகைப்படக் கண்காணிப்புக் கருவிகளின் (CCTV) மூலம் கண்டுபிடிக்கலாம்.
- மாணவர்களுக்குக் காவல் துறை அதிகாரியின் உதவியுடன் பொது உடைமைகளைச் சேதப்படுத்துவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகளைக் கூறச் செய்யலாம்.
- பள்ளி உடைமைகளைச் சேதப்படுத்துவருக்கு அபராதம் (Penalty) விதிக்கலாம்.
- பள்ளியை அசுத்தம் (Stain) செய்பவர்களைப் பள்ளி வளாகங்களைச் (Campus) சுத்தம் செய்ய பணிக்கலாம்.
- ____________________________________________________________

  ____________________________________________________________
- ____________________________________________________________

  ____________________________________________________________

**கீழ்காணும் சொற்களைக் கொண்டு வாக்கியம் அமைத்திடுக**

**1.** **நாட்டின் நலன் - குடிமக்கள் கடமை**

எ.கா : நாட்டின் நலனைப் பாதுகாப்பது குடிமக்களின் கடமைகளில் ஒன்றாகும்.

**2.** **விஷமம் - அழிவு**

____________________________________________________________

____________________________________________________________

**3.** **சொத்து - நஷ்டம்**

____________________________________________________________

____________________________________________________________

**4.** **பிளவு - வன்முறை**

____________________________________________________________

____________________________________________________________

**5.** **மீறுதல் - அமைதியைக் கெடுப்பது**

____________________________________________________________

____________________________________________________________

**சிங்கப்பூரில் பொதுவுடமை குற்றங்கள் தொடர்பான தகவல்கள்**




